இந்தியாவைப் போரில் கவிழ்க்கச் சதியா?

Phone: No. 4502 Regd: No. M. 5458
விலை முக்காலணா இலங்கை 8 சதம்

மாலை மணி

(திராவிடர் தமிழ் தினசரி கருத்திதழ்)

மாலை 2 | சென்னை 9—1—51 | மணி 38

முன்ஷி சதிகாரர்களுள் ஒருவரா?

—(:o:)—

உணவு நெருக்கடிக்குக் காரணம் என்ன?

—(o)—

இந்திய—அமெரிக்கக் கூட்டாட்சி

3-வது உலகப் போர் தோன்றி விட்டால், ஆள்பலம் மிகுந்த இந்தியா சுயேச்சையாகத் தான் விரும்பிய நாட்டுடன் கூடுமாறு விடவோ, அல்லது நடுநிலை வகிக்குமாறுவிடவோ கூடாதென்னும் முறையில் சதி நடக்கிறதாக "பிளிட்ஸ்" பத்திரிகை தெரிவிக்கிறது.

நாட்டிலே உணவில்லாப் பஞ்சம் தோன்றி இருப்பதற்குக் காரணம் இத்தகைய சதிதான் என்பதாகவும், இச்சதிபற்றிய தகவல் முக்கியமான பேர்வழிகளிடமிருந்தே கிடைத்துள்ளதாகவும் "பிளிட்ஸ்" தெரிவிக்கிறது.

பம்பாய், ஜன. 7—

நம் நாட்டிலே உணவு நெருக்கடி இன்றுள்ள அளவுக்குப் பெருகிவிட்டது பற்றி, ஒரு பெரிய காங்கிரஸ் தலைவர் உட்பட இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் வேறு விதமாகக் கருதுகின்றனர். அதில் ஏதோ மர்மம் இருப்பதாக அவர்கள் எண்ணுகின்றனர். உணவு மந்திரி முன்ஷியின் வெறிபிடித்த போக்குக்கு உள்ளூர வேறு காரணம் இருப்பதாகவும் அவர்கள் கருதுகின்றனர்.

திடீரென்று நாட்டிலே உணவு நெருக்கடி தோன்றிவிட்ட முறை வேண்டுமென்றே இந் நெருக்கடி விளைப்பப்பட்டிருக்கிறதென்று கருதுமாறு இருக்கிறது. மேலும் இந்தியாவின் முதலமைச்சர் நிலையும் இது குறித்து மிகுந்த நெருக்கடிக்குள்ளாக்கப்பட்டிருக்கிறது. அதாவது ஒன்று, லட்சக் கணக்கான மக்களை அவர் பட்டினியால் சாகுமாறு செய்துவிட வேண்டும். இல்லையென்றால், போர்க் காலத்தில் இந்தியா தன் விருப்பப்படி நடப்பதையும் நடு நிலைமை வகிப்பதையும் விட்டுவிட்டு அமெரிக்காவின் கைப்பதுமையாக ஆக வேண்டும். அப்படி ஆவதென்றால், அமெரிக்காவிலிருந்து கப்பல் கப்பலாக உணவுப் பொருள்கள் வந்து சேரும். எனவே, இத்தகைய நெருக்கடி மிக்க நிலையில் இந்திய முதலமைச்சர் ஆக்கப்பட்டிருப்பதற்குக் காரணம் இந்திய—அமெரிக்கப் பிற்போக்காளர்களிடையில் ஏற்பட்டிருக்கும் சதியேயாகும் என்று அவர்கள் கூறுகின்றனர். இந்த உணவு நெருக்கடியை மிகைப்படுத்தி, நேருவை மிரட்டி, போர் ஏற்பட்டால், அதில் இந்தியாவை அமெரிக்காத் தரப்பில் இழுத்துக் கொள்ளவே இந்தச் சதியாலோசனை நடைபெற்றிருக்கிறது என்று இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர்களுட் சிலர் நம்புகின்றனர்.

எனவே, முதலமைச்சர் இத்தகைய சதிக்கு ஆளாகாமல், சோவியத் அரசாங்கம் எந்த நிபந்தனையுமில்லாமல் உணவுப் பொருள்கள் கொடுக்க முன் வந்திருப்பதை இந்தியா பெற்றுக்கொள்வதொன்றே சதிசெய்யும் அமெரிக்காவுக்குச் சரியான சூடு கொடுப்பதாகும் என்று ஒரு பாராளுமன்ற உறுப்பினர் கருதுகிறார். இந்த நெருக்கடியான நிலைமையில் ரஷ்யாவின் உதவியைப் பெறுவது இந்திய மக்களும் அரசாங்கமும் விரும்பத்தக்க செயலாக இருக்குமென்றும் அவர்கள் கருதுகின்றனர்.

உள்ளதைக் கூறினால் உடம்பெரிச்சல்!

—(:o:)—

மாணவர்களைக் கண்டு சட்டநாதக் கரையாளர் சீற்றம்

விளாத்திகுளம், டிச. 31—

பஞ்சப் பிரதேசத்தைப் பார்வையிட வந்த சட்டசபை உறுப்பினர் தோழர் சட்டநாதக்கரையாளர், கோசல்ராம் இவர்களிடம் அவ்வூர் மாணவத் தோழர்கள் ஒரு மனுவை வாசித்தளித்தனர். அதில், உணவுப் பங்கீட்டைச் சரியான முறையில் நடத்த முடியுமானால் நடத்தட்டும், இல்லையேல் விட்டொழியுங்கள் என்றும், இப்பிராந்தியத்தில் ஓடும் வைப்பார் நதியில் கால்கள் வெட்டி விவசாயத்திற்குப் பயன்படுத்தலாம் எனவும், இன்னும் அவர்கள் நிர்வாகத் திறமையின்மையையும் எடுத்துக்காட்டினார்கள்.

இதற்குப் பதிலளித்த சட்டநாத கரையாளர் சற்று பொறுமை இழந்தார். மாணவர்கள் உண்மையை உரைத்தனர். ஆளாள்பவர் அலட்சியம் செய்கின்றனர் மக்களை, அவர் கூறுகிறார்: "மாணவ நண்பர்கள் வாசித்த மனு எனக்குச் சற்றுக் கோபத்தை உண்டுபண்ணுகிறது. இன்று மாணவர்கள் மனதிலே ஒரு சில கட்சிகளால் விஷவித்துக்கள் தூவப்பட்டு வளர்க்கப்படுகிறது. இங்குமட்டுமல்ல மாகாண முழுமையும் காண்கிறேன். நமது ஆட்சி யதேச்சதிகாரத்திற்கு ஒப்பிடுவது என்று மனிதன் செல்லும் சொல்லல்ல"

மாணவர்களுக்கு நாட்டின் நிலை நன்கு தெரியும். அயல் நாட்டு ஆட்சிவரலாறும் அவர்கள் நாட்டில் நடந்த சரித்திரங்களையும் படித்தவர்கள். ஆதலால் குறையைக்கண்டு கூறுகின்றனர் "மாணவர்கள் கூற வேண்டிய நிலைக்கு நாம் வந்துள்ளோமே" என்று உணர்ந்து நடந்து கொள்வதைவிடுத்து கோபிப்பதில் பயனென்ன?

அமைச்சருக்கு காட்டுங்கள் கருப்புக்கொடி!

நாளது 11—1—51 வியாழக்கிழமை பகல் 12-மணிக்கு திண்டுக்கல் வழியாக டில்லி மந்திரி தோழர் மஹதாப் திருச்சியிலிருந்து வருகிறார். அவருக்கு அமைதியான முறையில் நம் அதிருப்தியை தெரிவித்துக்கொள்ள திராவிடத் தோழர்கள் அனைவரும் வந்து கலந்து, யாதொரு பலாத்காரத்திற்கும் இடமளிக்காமல் அமைதியோடும் ஆர்வத்தோடும் கருப்புக்கொடி பிடித்துப் பணியாற்ற வாருங்கள்!

தலைமை தாங்கி நடத்துபவர்கள், சி. எஸ் சூரியன், என். முத்து, கருப்புக்கொடி பிடிக்கும் தொண்டர்கள், நாளைமுதல் சி. எஸ். சூரியன் அவர்கள் ஸ்டாலில் பதிவு செய்து கொள்ளவும். காலை 12 மணிக்கு, திண்டுக்கல்—திருச்சி ரோட்டிலுள்ள தீப்பாச்சம்மன் கோவில் அருகில் தொண்டர்கள் அணிவகுத்து நிற்பார்கள்.

என். முத்து
திராவிட முன்னேற்றக் கழக செயலாளர்
திண்டுக்கல்

துருவ பிரதேசத்தில் பறந்து செல்லும் ஜெட் விமானம்

ஹாலிபாக்ஸ் (கனடா) ஜன, 8—

பனியடர்ந்த துருவ பிரதேசங்களில் செல்வதற்கானபடி ஏற்ற சாதனங்களைக்கொண்ட ஜெட் விமானங்கள் கனடாவில் தயார் செய்யப்படும் என்று தெரிகிறது.

கிழக்கு ஜெர்மனியில் கெடுபிடி

பெர்லின், ஜன. 8—

குழந்தைகளுக்கு கல்வி கற்பிப்பதற்காக கிண்டர் கார்டன் பள்ளிகளிலுள்ள பொம்மை சாதனங்களில் ஏகாதிபத்திய சின்னமான எதுவும் கூடாது என்று கிழக்கு ஜெர்மன் சர்க்கார் உத்திரவு பிறப்பித்திருக்கின்றனர்.

'மான்' தீவில் உரேனியம்

டக்ளஸ் (இயல்ஆப்மான்), ஜன. 8-

மான் தீவில் உரேனியம் கிடைக்கிறதென்றும் இதை வெளிப்படுத்த ஒரு எஞ்ஜினியர் இரண்டு ஆண்டு காலமாக முயன்று வருவதாகவும் தெரிகிறது.

இவைகளை வெட்டிஎடுக்க இவர் கேட்ட லைசென்ஸ் மறுக்கப்பட்டு விட்டதாம்.

மாலைமணி

சென்னை 9—1—51 செவ்வாய்க்கிழமை

பிணம் மணக்குமா?
(1)

திருவையாறு அரசர் கல்லூரியில் 'பாணினி' நாள் கொண்டாடப்பட்டபோது, வடமொழி ஆத்தான கவி பதவி பெற்றுள்ள தோழர் கிருட்டினமூர்த்தி சர்மா, தமிழர்களை இழித்துரைத்து வாய்க்கு வந்தவாறு பேசியிருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது.

திருக்குறளைப் பழித்துப் பேசியதாகவும், தொல்காப்பியத்தைப் பழித்துப் பேசியதாகவும், தமிழர்கள் பல இடங்களில் பிச்சையெடுத்து வந்து பொருள்களைத் தங்கள் சொந்தப் பொருள்களெனக் கூறித்திரிகின்றனர் எனக்கூறியதாகவும் செய்தி கிடைத்திருக்கிறது.

இச்செய்தி உண்மையாயின், வடமொழி ஆத்தானக் கவியின் அறியாமை கண்டு இரக்கப்படுகிறோம்.

வடமொழிக்குச் சமஸ்கிருதம் எனும் பெயர் வந்தது ஏன் என்றும், அப்பெயருக்குப் பொருள் என்னவென்றும் தெரிந்து கொள்ளவும் முடியா நிலையிலுள்ள அவர் ஆத்தான கவியாக இருப்பது குறித்து வருந்துகிறோம்.

உலகில் வாழச் சொந்த இடமின்றி ஆடுமாடுகளை மேய்த்துக்கொண்டு, செழிப்புள்ள மேய்ச்சல் நிலங்களைத் தேடிக்கொண்டு ஊர் ஊராக, நாடு நாடாக, அலைந்துகொண்டு வந்த மக்கள், ஒழுக்கமோ, வாழ்க்கை நியதிகளோ அற்றுக் காட்டுமிராண்டிகளைப் போன்ற வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்த லம்பாடி மக்கள், திராவிடர்கள் ஆண்டுகொண்டிருந்த இந்திய நாட்டிலே புகுந்து, சிந்து சமவெளியையும், கங்கைச் சமவெளியையும் கண்டு மயங்கி செழிப்பு மிக்க இந்த நாட்டிலேயே தங்கிவிட எண்ணி, ஆங்காங்கே உறையத் தொடங்கிய வரலாறு ஆத்தானக் கவி படித்ததில்லைபோலும்.

கங்கைச் சமவெளியிலும், சிந்து சமவெளியிலும், திராவிடர்கள் ஒழுக்க சீலர்களாய், நாகரீகம் மிக்கவர்களாய், பண்பட்ட கலாச்சாரங்களுடையவராய், இனிய மொழி பேசுபவராய், உயர்ந்த வாழ்க்கை வாழ்பவராய் இருந்ததைக் கண்ட இந்த நாடோடி மக்கள் திராவிடர்களுடைய துணைபெற்று, அவர்களோடு உறவாடி, அவர்களுடைய மொழியைப் பயின்று, திராவிட மொழியமைப்பைக் கொண்டு, தங்கள் லம்பாடி மொழியைச் செப்பம் செய்து கொண்டதனாலேயே, செம்மையாக்கப்பட்ட மொழி எனும் பொருள் தரக்கூடிய சமஸ்கிருதம் என அம்மொழிக்குப் பெயர் வந்ததென்பதை ஆத்தான கவி அறியார் போலும்!

"கங்கைச் சமவெளியில்தான் வேத வேதாந்தங்களெல்லாம் எழுதப்பட்டனவென்பதிலிருந்தே, திராவிடப் பெருமக்களின் உயர்ந்த தத்துவங்களைச் சேர்த்து, :தாங்களறிந்திருந்த கதைகளையும் பிணைத்து அவற்றை, ஆடு மாடோட்டிவந்த அந்த மக்கள் வேதங்களாக எழுதி வைத்தனர்" என்று ஆராய்ச்சியாளர்கள் வெளியிட்டிருக்கும் உண்மைகளை ஆத்தான கவி படிக்கவில்லை போலும்.

வேதாந்தமும், உபநிடதங்களும் தமிழரிடமிருந்து எடுத்துச் செல்லப்பட்டவை என்று காலஞ் சென்ற பேரறிஞர் மறைமலையடிகள் கூறியுள்ளதை ஆத்தான கவி மறந்துவிட்டார்போலும். அல்லது மறைமலையடிகள் மறைந்துவிட்டபடியால், இனித்தட்டிக்கேட்க ஆளில்லை என்ற துணிவுதான் ஏற்பட்டு விட்டதோ!

சமஸ்கிருத மொழி இந்நாட்டிற்கு ஆடுமாடுகளை மேய்த்துக்கொண்டுவந்த கூட்டத்தினரான ஆரியரால் பேசப்பட்டு, பின்னம் நாட்டுக் கங்கைச் சமவெளியில் திருத்திச் செம்மையாக்கப்பட்ட ஆரிய மொழி, அது நிலைத்து நிற்கும் வலுப்பெற்றிராமையால், மக்களிடையே பேச்சு வழக்கற்று, இன்று பிணமாகிவிட்டது.

செத்துப் பிணமாகிவிட்ட அந்த மொழியில் உள்ள நல்ல கருத்துக்களைப் போதிக்கும் நெறிநூல்களாகிய உபநிடதங்கள் அனைத்தும் தமிழரிடமிருந்து கொண்டுபோகப்பட்டவை என்பதும், வடமொழியில் முதல் முதலாக எழுதப்பட்ட ரிக்கு வேதத்திலே ஒரு சில தமிழ்ச் சொற்கள் கலந்திருக்கின்றனவென்றும் மொழி ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்பவர்

—(o—)—

தமிழர்களை பழித்துரைக்கும் துணிவும் வந்துவிட்டதோ!

—:o:—

அற்பருக்கு வாழ்வுவந்தால்...?

—(:0:)—

அரசர் கல்லூரியில் ஆணவப்பேச்சு

சென்னை, ஜன. 7—

திருவையாற்றிலே உள்ள அரசர் கல்லூரி நீண்ட காலமாக வடமொழியாளரின் சுயநலக் கோட்டையாக இருந்தது, காலஞ் சென்ற தலைவர்கள் தோழர் ஏ.டி. பன்னீர்செல்வம் அவர்களும், உமாமகேசுவரம் பிள்ளை அவர்களும் முயன்று தமிழர்களுக்கும் அக்கல்லூரி பயன்படுமாறு செய்து வைத்தனர்.

அக்கல்லூரியில் வடமொழி மாணவர் கழகத்தில் பாணினி நாள் கொண்டாடப்போன வடமொழி ஆத்தானக்கவி, தம் மொழியின் சிறப்பையோ, பாணினியின் பெருமையையோ கூறிவிட்டுப் போகாமல் தமிழர்களின் அரிய நூல்களாகிய திருக்குறளையும் தொல்காப்பியத்தையும் பழித்துரைத்திருப்பதாகத் தெரிகிறது.

இது தமிழர்களின் ஆத்திரத்தைக் கிளப்பிவிடக் கூடியதாக இருக்கிறது. இந்த நிலை வளர்ந்தால், நாட்டிலே வீணில் விபரீதக் கிளர்ச்சிகள் ஏற்பட இடங்கொடுத்தாகும். ஆகையால், அரசாங்கம் உடனே முனைந்து. அந்த ஆத்தானக் கவியின் அறியாமையைக் களைந்து அறிவு புகட்ட வேண்டுகிறோம்.

திருவையாறு அரசர் கல்லூரி வடமொழி மாணவர் கழகத்தில் அம்மாணவர்கள் 'பாணினி' தினம் கொண்டாடினார்கள். அதுபோது வடமொழி ஆத்தானக்கவி கிருட்டினமூர்த்தி சர்மா, "அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத்தறித்த குறள்" எனத் தமிழர்கள் சொல்லுகிறார்கள். அந்த மாதிரியான குறள் ஆயிரத்தைச் சுருக்கிச்சொல்லி அர்த்த விசேடங்களிலே பிரசித்தி பெற்றதாக எங்கள் வியாகரணசூத்திரம் ஒவ்வொன்றும் இருக்கிறது. இதை யாராவது மறுக்கிறதென்றால் என்னிடத்தில் வந்து பேசிப் பார்க்கட்டும்" எனக் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசியபோது, திணை, பால் முதலிய சிறப்புகள் தான் தொல்காப்பியத்தில் உள்ளனவே யொழிய, மற்ற வகையில் வியாகரணத்தை நோக்க மலைக்கும் மடுவிற்கும், சூரியனுக்கும் மின்மினிக்கும் உள்ள வேறுபாடு உள்ளதென்றும், ஒரு பிச்சைக்காரன் பல கடைகளில் பிச்சை வாங்கி ஒன்று சேர்த்து இறுதியில் எல்லாம் என்னுடைய சாமான் என்றுகூறி விற்பதுபோல எங்கள் மொழியிலிருந்து, எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு, இன்று தங்களுடைய கருத்துக்கள் என்று தமிழர்கள் கூறித்திரிகிறார்கள் என்றும், இதைப்பற்றி இங்குள்ளவர்கள் பேசவரலாம் என்றும், கல்லூரி நிர்வாகத்திற்குக் கட்டுபட்டு நடக்கும் மாணவர்களிடத்தில் சவால் விடுத்தார்.

தமிழ்நாடு கலைத் திருவிழா

மதுரை ஜன. 2—

ஜனவரி 1-ந் தேதி மாலை அகில இந்திய சினிமா நண்பர்கள் சங்கக் கட்டிடத்தில் தமிழ் நாடு கலைத் திருவிழா செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. அப்போது மதுரை புதுமண்டபத்தில் 7-1-51 ஞாயிற்றுக் கிழமை நடக்கவிருந்த தமிழ் நாடு கலைத் திருவிழாவை தமிழ்த் திருநாளான பொங்கல் (14-1-51) ஞாயிறு அன்று நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

மாநாட்டுக்குத் தலைமை தாங்க திருநெல்வேலி சேர்மன் தோழர் ப. ராமசாமி அவர்களும், திறப்பாளராகவிருதுநகர் 'தமிழ்த்தென்றல்' ஆசிரியர் தோழர் வே. வ. இராமசாமி அவர்களும், மற்றும் நாரண துரைக்கண்ணன், கி. ஆ. பெ. விசுவநாதம், மு. கருணாநிதி, அரு. ராமநாதன், குறள் வி. முனுசாமி, கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், பி. வி. நரசிம்ம பாரதி, பி. எஸ். கோவிந்தன், திருச்சி லோகநாதன், எம். எம். மாரியப்பா, மாஸ்டர் சுப்பையா, ஈ. எம். ஹனிபா திருமதி பி. எஸ். செல்வா ஆகியோர் இசைந்துள்ளார்கள், இரவு டி. கே. எஸ். சகோதரர்களின் அந்தமான் கைதி நாடகத்தைப் புதுமைக்கலா மன்றம் நடத்தித் தரும் என்று செயலாளர் மதுரை மன்னன் எழுதுகிறார்.

தமிழர் திருநாள்

ஆம்பூர்:-16-1-51-ந் தேதி செவ்வாய்க்கிழமை தமிழர்த் திருநாள் விழா சாணங்குப்பம் மாணிக்கம் மைதானத்தில் தோழியர் மூதாட்டி இராமமிருதத்தம்மையார் பேசுவார்கள்.